<u>குளித்தலை நகராட்சி</u>

2022ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள்பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

<u>29.07.2022ஆம் தேதிய அவசரக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதின் பொருள்கள்–</u>

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன்–2022.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன்–2022.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சிப் பகுதியில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–2022ன்கீழ் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் குளித்தலை பணிமனையில் கான்கிரீட் தளம் அமைத்தல் (750ச.மீ.) பணிக்கு ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–2022ன்கீழ் தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக்கழகம் குளித்தலை பணிமனையில் கான்கிரீட் தளம் அமைத்தல் (750ச.மீ.) | திரு.பி.அண்ணாதுரை, அண்ணா நகர், குளித்தலை | 0.04 % குறைவு |
| | | திரு.அ.மாதேஸ்வரன், வையாபுரி நகர், குளித்தலை. | 0.05% அதிகம் |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.04 % குறைவாக குறிப்பிட்டுள்ள திரு.பி.அண்ணாதுரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். (ந.க.எண்.296/2022/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையம் மராமத்துப் பணி, அலுவலக கட்டிடம் புதிதாக கட்டுவது, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஒரே நேரத்தில் மண் பரிசோதனை செய்ய வேண்டி இருப்பதால், மேற்படி பரிசோதனை செய்வதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.979/2022/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.4ல் நாப்பாளையம் பைபாஸ் சாலையின் ஓரத்தில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. அதனை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மராமத்துப் பணிகள் செய்ய நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் தெரிவித்ததின்பேரில், மேற்கண்ட கழிப்பிடத்தினை மராமத்து செய்ய மதிப்பீடு ரூ.4,00,000/–க்கு (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் என்பதால், உடனடியாக இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், பணியினை செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் என்பதால் உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரவும், பணியினை செய்து முடிக்கவும், மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.979/2022/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் ஒரே சீரான முறையில் 24 மணி நேரமும் குடிநீர் குழாய் மூலம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மத்திய அரசு திட்டம் அம்ருத் 2.0 என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நகராட்சியினை சிறப்பினமாக கருதி குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த அனைத்து பகுதிகளிலும் Pipe Line Levels எடுக்கவும், புதியதாக பகிர்மான குழாய்களை மாற்றவும் மற்றும் புதியதாக ஒரு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டவும் அறிவுறுத்தப்பட்டது. இப்பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்து TUFIDCO அலுவலகத்தின் மூலம் அனுமதி பெறுவதற்கும், கலந்தாலோசகர் ஒருவர் மூலம் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி, கலந்தாலோசகர் மூலம் பணி மேற்கொள்ளவும், மொத்த மதிப்பீட்டில் 1.50% வழங்கவும் இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து ஈடு செய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.763/2022/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2020–2021 முதல் 30.09.2021 வரை குத்தகைதாரர்கள் கீழ்க்கண்டவாறு தொகை செலுத்தாமல் உள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1) | இருசக்கர ஊர்திகள் நிறுத்துமிடம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | ரூ. | 267122.00 |
| 2) | பேருந்து நிலைய நவீன கழிவறையில் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | ரூ. | 81828.00 |
| 3) | ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | ரூ. | 35877.00 |

மேற்கண்ட இனங்களின் குத்தகைதாரர்களுக்கு பலமுறை தொகை செலுத்த கோரியும், குத்தகை தொகை செலுத்தாததால், மேற்கண்ட 3 குத்தகைதாரர்கள்மீது தனித்தனியாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர, நீதிமன்ற கட்டணம், வக்காலத்து ஆவணங்கள் தயார் செய்து வழக்கு தொடரவும், ஆணையர் சார்பாக வாதாடும் நகராட்சிக்குழு வழக்கறிஞருக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1813/2021/அ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சியில் தினமும் குடிநீர் விநியோகம், குடிநீர் குழாய் பைப்புகள் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரிசெய்வது மேலும், தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மூன்று நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். மேலும், இரண்டு குடிநீர் மேநிலைநீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. அதற்கு பகல் மற்றும் இரவு நேரங்களுக்கு காவலர் பணிக்கு நபர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே மேற்கண்ட பணியாளர்கள் மிவும் அவசியம் தேவைப்படுவதால் இப்பணியினை மேற்கொண்டுவரும் நிறுவனத்தின் பணியாளர்கள் 7 நபர்களை தொடர்ந்து ஒன்பது மாதங்களுக்கு (01.07.2022 முதல் 31.03.2023 வரை) நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளவும், (இதற்கு உண்டான செலவுத் தொகை ரூ.9.00 இலட்சம்) மேற்கண்ட பணியாளர்கள் அமர்த்திடவும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இதற்காகும் செலவினத் தொகையை 2022–2023 குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1066/2019/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பெரியார்நகர் மற்றும் வைகைநல்லூர் நாப்பாளையம் OHT-ல் அடிக்கடி நீர் கசிவு ஏற்படுகிறது. மேலும், குடிநீர் குழாய்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட OHT–ல் உள்ள 250 MMCI soulice valve-ல் உள்ள பித்தளை ராடு மற்றும் நட்டு (Brass spinle rod with nut) உள்டேங்க், வெளிடேங்க் டெலிவரி பணிகளுக்கு ராடு மற்றும் நட்டு புதியதாக நான்கு எண்ணிக்கை உடனடியாக தேவைப்படுகிறது. மேற்கண்ட பழுதுகளை சரி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இதற்காகும் செலவினத் தொகையை 2022–2023 குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.709/2022/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தை, மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகத்துறை அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு எண்.22 இணங்க பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியை மேற்கொள்வதை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.732/2022/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுக்கழிப்பிடம் மற்றும் ஆழ்துளை கிணறு இவைகளில் மின்மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், வயரிங் சம்பந்தமான மின் சாதனங்கள் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, மின்மோட்டார்கள், மற்றும் இதர பொருட்களை உடனுக்குடன் மாற்றம் செய்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், காலதாமதத்தை தவிர்க்கும் நோக்கத்திலும், அவசர அவசியம் கருதி ஓராண்டிற்கு (2022–2023ம் ஆண்டுக்கு) ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினத்தை 2022–2023ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.935/2022/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சி ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் ஒருசேர பயன்படுத்திக் கொள்ளக்கூடிய கழிவு கசடு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் அமைக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ.285.00 இலட்சம் ஆகும். இப்பணிக்கு உண்டான காலம் ஒரு வருடம் என குறிப்பிட்டு ஒப்பந்ததாரர் முத்திரை தாளில் ஒப்பபந்தம் செய்து கொடுக்கப்பட்டது (பணி முடிவு பெறும் நாள் 01.11.2019) ஆகும். இப்பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதால் தொடர்ந்து அறிவிப்புகள்மூலமும், நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்கள் கைபேசி மூலம் பணிகளை துரிதப்படுத்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

17.05.2022 ஆம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தின் போது பணிகள் முன்னேற்றம் இல்லாததால் பணியினை ரத்து செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் தெரிவித்ததின் அடிப்படையில் பணியினை ஒப்பந்ததாரருக்கு ரத்து செய்ய உத்தேதிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் மீதமுள்ள பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டி நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மறுமதிப்பீடு தயார் செய்த மதிப்பீட்டை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1387/2021/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி 15வது மத்திய நிதிக்கழு 2022-2023 Tied and Untied Grant திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள் மதிப்பீடுகள் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரி கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண். | பணிகள் விபரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **15th CFC Tied Grant 2022-2023** | | |
| 1) | குடிநீர் விநியோகம் செய்யும் லாரி வாங்குதல் | 1 | **31.00** |
| 2) | கழிவு நீர் லாரி வாங்குதல் | 1 | **31.00** |
| | மொத்தம் | | **62.00** |
| | **15th CFC Un-Tied Grant 2022-2023** | | |
| 1) | மோட்டார் பம்பு மற்றும் சார்ட்டர் 33 HP மற்றும் 25 HP வாங்குதல் | | 10.00 |
| 2) | மோட்டார் அறை முதல் ஆற்றுலியிருந்து நீர் உறுஞ்சும் கிணறு வரை 1800 மீட்டர் கேபில் வாங்குதல் | | 5.50 |
| 3) | ஆற்றிலுள்ள நீர் உறுஞ்சும் கிணற்றினை தூர்வாறும் பணி | 2 | 5.00 |
| 4) | பாட்டரி வாகனங்கள்(BOV) வாங்குதல் | 2 | 4.50 |
| 5) | செக்கடி புதுத் தெரு கழிவறை மராமத்துபணி செய்திட | | 4.00 |
| 6) | வடக்கு முத்துராஜா தெரு கழிவறை மராமத்துபணி செய்திட | | 4.00 |
| 7) | புது கோர்ட் தெரு கழிவறை மராமத்துபணி செய்திட | | 4.00 |
| 8) | உழவர் சந்தை மகளிர் கழிவறை மராமத்துபணி செய்திட | | 4.00 |
| | மொத்தம் | | **41.00** |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியை மேற்கொள்வதை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 14. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகளை பழுதடைந்துள்ளதை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு 09.05.2022ம் தேதிய 35ம் எண்ணிட்ட தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 09.06.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | தள்ளுவண்டிகள் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | ஸ்ரீபார்கவி ஏஜென்சிஸ், குளித்தலை. | 0.48 % குறைவு |
| | | நந்தினி ஏஜென்சிஸ், குளித்தலை. | 1.45 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட குறைந்த சதவீதத்தில் அளித்துள்ள ஸ்ரீபார்கவி ஏஜென்சிஸ், குளித்தலை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). செலவினத்தை 2022–2023ம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுதிக்கலாம்.
(ந.க.எண்.533/2022/எச்1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சிப் பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு செய்து அடையாள அட்டை வழங்குவதற்கு 15.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | நபர் 1க்கு ரூ. (GST இல்லாமல்) |
|---|---|---|
| 1) | Sense Image Technologies Private Limited, Chennai | 700/– |
| 2) | Whiteo Ox Private Limited, Chennai | 900/– |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.928/2022/பி2)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23, சண்முகாநகரில் கான்கிரீட் சாலைகள் புதிதாக அமைக்க பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து ஈடு செய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.952/2022/இ1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட சண்முகாநகர் வார்டு எண்.23ல் சுகாதாரகேடு விளைவிக்கும் வகையில் தெருக்களில் தண்ணீர் செல்லாமல் தேங்கி நிற்கிறது. இச்சூழலை தவிர்க்கும் பொருட்டு சுமார் 120 மீட்டர் நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4,35,000/–க்கு (ரூபாய் நான்கு லட்சத்து முப்பத்தைந்து ஆயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், மழைநீர் வடிகால் அமைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1131/2022/இ1)

பொருள்– 18. தமிழ்நாடு அரசு சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் சமய அறநிலையத் துறை (C2) துறை, அரசாணை (Rt) எண்.172, நாள்–14.07.2022 மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலாளர் அவர்களின் கடிதம் எண்.2425/சி2/2021–15, நாள்–27.05.2022 கடிதத்தில், "The Government of India has proposed that "Har Ghar Tiranga" (Anaithu Veedugalil Desiya Kodi) programme will be celebrated during Independence Week 11-17 August, 2002. During this week all households will hoist the national flag" என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, இந்தியாவின் 75வது ஆண்டு சுதந்திர தினத்தை ‘‘சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா’’ கொண்டாட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தலைமைச் செயலாளர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் (சுமார் 8500 வீடுகள்) இந்திய தேசியக்கொடியினை DBC பணியாளர்களைக் கொண்டு வழங்கவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கும் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1220/2022/எச்1)

<u>புதிய பொருள்கள்–</u>

பொருள்– 19. குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுலை–2022 மற்றும் ஆகஸ்ட்–2022ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 20. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை–2022, ஆகஸ்ட்–2022 மற்றும் செப்டம்பர்–2022ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 21. குளித்தலை நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப்பணி, தூய்மை பணி, கொரோனா வைரஸ் தொற்றும் மற்றும் டெங்கு தடுப்புப்பணி தொடர்பாக, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சிப் பகுதியில் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கும், கிருமி நாசினி கொள்முதல் செய்வதற்கும், 2022–2023ஆம் ஆண்டுக்கான தளவாட சாமான்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.650/2021/எச்1)

பொருள்– 22. குளித்தலை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணி மேற்பார்வையாளர்கள், தூய்மை பணியாளர்கள், மின் பணியாளர்கள், ஓட்டுநர்கள் ஆகியோர்களுக்கு 2022–2023ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வாங்குவதற்கு அரசு சார்பு நிறுவனத்திடம் (கோ–ஆப் டெக்ஸ்) சீருடைகள் வாங்கி வழங்குவதற்கும் மற்றும் தையல் கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1328/2022/எச்1)

பொருள்– 23. குளித்தலை நகராட்சி முன்னாள் கணக்கர் தற்காலிக பணி நீக்கம் திருமதி.சு.சத்யா, ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிட் நிறுவனத்தில் கடன் பெற்றுள்ள தொகையை பிடித்தம் செய்து அனுப்ப மாண்பமைமிகு திண்டுக்கல் மாவட்ட நீதிமன்ற ஊதிய பிடித்த ஆணை EP.No.266/2015, ACP No.1307/2010 குளித்தலை நகராட்சி ஆணையர் சார்பாக ஆஜர்செய்து திரு.N.சிவக்குமார்,M.L., அவர்கள் வாதாட வழக்கறிஞர் கட்டணம் ரூ.6000/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்– 24. குளித்தலை நகராட்சி இளநிலை உதவியாளர் திரு.ப.ராமமூர்த்தி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்துள்ள வழக்கு WP(MD)No.2054/2021 தற்போதைய நிலையில் நகராட்சி நிலைக்குழு வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.AN.ராமநாதன் அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான மாண்பமைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வக்காலத்து மாற்றம் செய்து பதிவு கட்டணம் (Change of Vakalat) ரூ.5000/–ஐ, வழக்கறிஞர் கட்டணத்தினை திரு.AN.ராமநாதன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

பொருள்– 25. குளித்தலை நகராட்சியின் 24 வார்டுகளிலும், குடிநீர் விநியோகம் சீரான முறையில் 24 மணி நேரமும் கிடைக்க, AMRUT 2.O திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவதற்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MA2) துறை அரசாணை(Ms) எண்.125, நாள்–09.09.2022ல், அரசு ரூ.13.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, மேற்கண்ட தொகைக்கு மதிப்பீடு தயார் செய்து, தொழில் நுட்ப அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும், கீழ்க்கண்ட விபரப்படியான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | கணக்கெடுப்பு (சர்வே) பணிக்கு | ரூ. | 4.40 | லட்சம் |
| 2) | Design மற்றும் வரைபடம் தயாரித்தல் | ரூ. | 4.50 | லட்சம் |
| 3) | மதிப்பீடு தயார் செய்து தொழில்நுட்பம் அனுமதிபெற | ரூ. | 4.25 | லட்சம் |
| | மொத்தம் | ரூ. | 13.15 | லட்சம் |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1383/2022/இ1)

பொருள்– 26. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19, அண்ணாநகர் பகுதியில் இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்கா எவ்வித பயன்பாடும் இல்லாமல் உள்ளது. மேற்கண்ட பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நோக்கோடு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.38.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை முழு மான்யத்துடன் வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1096/2022/இ1)

..8..

பொருள்– 27. குளித்தலை நகராட்சி IUDM 2018-2019 திட்டத்தின்கீழ் கழிவு கசடுநீர் சுத்திகரிப்பு நிலையம் (20 KLD) அமைக்க வழங்கப்பட்ட தொகை ரூ.285.00 லட்சத்தில் மேற்கண்ட பணி 70% பணிகள் முடிவுற்ற நிலையில், ஒப்பந்ததாரரிடம் இருந்து பணி முன்னேற்றம் இல்லாததால் பணியினை ரத்து செய்து மீண்டும் எஞ்சிய பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்க்கண்டவாறு,

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | IUDM 2018-2019 திட்டத்தின்கீழ் கழிவு கசடுநீர் சுத்திகரிப்பு நிலையம் (20 KLD) அமைத்தல் (எஞ்சிய பணி) | திரு. பெருமாள், மணப்பாறை | 5.20% அதிகம் |
| | | திரு.எஸ்.பழனிச்சாமி, குளித்தலை | 0.04% குறைவு |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற திரு.எஸ்.பழனிச்சாமி என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கவும், பணியினை செயல்படுத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). திட்டப்பணி என்பதால் பணியினை செய்ய வேண்டியதின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்– 28. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட நமக்கு நாமே திட்டத்தின்கீழ் சமுதாய மேடை அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27519–49/2021/பி2, நாள்–13.08.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 24.08.2022ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக குறிப்பிட்டுள்ள திரு.அ.மாதேஸ்வரன் விலைப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் விவரம் | மதிப்பீடு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | வார்டு எண்.9, வடக்கு முத்துராஜா தெருவில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் சமுதாய மேடை அமைக்கும் பணிக்கு | திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை. | 0.91% அதிகம் |
| | | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.17% குறைவு |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.அ.மாதேஸ்வரன் என்பவருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.468/2022/இ1)

பொருள்– 29. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிசான்று 28.09.2022.ல் முடிவடைவதால், அதனை புதுப்பிக்க பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு உதிரிபாகங்கள் மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அதற்கான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி வாகனத்தின் கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1415/2022/எச்1)

பொருள்– 30. இந்நகராட்சி 2022–2023ஆம் ஆண்டுக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், அனைத்து பிரிவுக்கும் தேவையான பேப்பர்கள் மற்றும் ரசீது, எழுது பொருட்கள் ஆகியவற்றினை தேவைக்கேற்ப அவ்வப்போது, அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சியில் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–த்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்காணும் செலவினம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1498/2022/அ1)

பொருள்– 31. குளித்தலை நகராட்சிக்கு புதியதாக உரக்கிடங்கு அமைக்க, சத்தியமங்கலம் கிராமத்தில் திரு.எ.அண்ணாத்துரை என்பவருக்கு சொந்தமான சர்வே எண்.104/2ல் உள்ள 8.82 ஏக்கர் நிலத்தினை, 15.10.2003ல் கிரயத்திற்கு வாங்கப்பட்டது. மேற்படி விற்பனை செய்யப்பட்ட நிலத்தின்மீது வில்லங்கம் ஏதும் இருப்பின், அதற்கு ஜாமின் நிலமாக மேற்கண்ட நிலத்தின் அருகில் உள்ள சர்வே எண்.331/4–ஐ பதிவு செய்து கொடுத்துள்ளார்.

தற்போது திரு.எ.அண்ணாத்துரை அவர்கள், 17.06.2022ஆம் தேதிய கடிதத்தின்மூலம் சத்தியமங்கலம் உரக்கிடங்கிற்கு விற்பனை செய்த நிலத்திற்கு ஜாமின் நிலமாக வழங்கப்பட்டதை விடுவித்து வழங்குமாறு கோரியுள்ளார். அதன்படி, நிலத்தினை மேற்கண்ட திரு.எ.அண்ணாத்துரை என்பவர்வசம் வழங்குவது குறித்து, அரசு வழக்கறிஞரிடம் கருத்துரு கோரப்பட்டதில், திரு.எ.அண்ணாத்துரை அவர்கள் ஜாமின் நிலமாக வழங்கியதை (சொத்து) விடுவிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட உரக்கிடங்கு அமைக்கப்பட்டுள்ள நிலத்திற்கு ஜாமின் நிலமாக வழங்கப்பட்டதை (சொத்து) விடுவித்து, நில உரிமைதாரர் திரு.எ.அண்ணாத்துரை என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட குளித்தலை நகராட்சியின் உரக்கிடங்கிற்காக சத்தியமங்கலம் கிராமத்தில் உள்ள சர்வே எண்.104/2.ல் உள்ள 8.22 ஏக்கர் நிலம் கிரயத்திற்கு பெற்று 19 வருடங்கள் ஆனதாலும், இதுவரை இந்நிலத்தின்மீது எந்தவொரு வில்லங்கமும் இல்லாத காரணத்தாலும், அரசு வழக்கறிஞர் மேற்கண்ட ஜாமின் நிலத்தினை விடுவித்து வழங்கலாம் என வழங்கிய கருத்துருவின்பேரிலும், நிலத்தின் உரிமையாளர் திரு.எ.அண்ணாத்துரை என்பவர் ஜாமின் நிலமாக பதிவு செய்து கொடுத்துள்ள சர்வே எண்.331/4–ஐ விடுவித்து, இந்நிலத்தினை திரு.எ.அண்ணாத்துரை என்பவர்வசம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.924/2022/பி2)

பொருள்– 32. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சாலையோர கடைகளில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம், அரசாணை மற்றும் குத்தகை நிபந்தனைகள், கட்டுபாடுகளுக்கு உட்பட்டு, ஒப்படைக்கும் நாள் முதல் 2024–2025 வரை தினசரி சுங்கம் வசூல் செய்துகொள்ளும் உரிமைக்கு, 17.02.2021, 10.03.2021, 23.07.2021, 12.08.2021, 22.09.2021, 03.11.2021, 19.11.2021, 28.01.2022, 17.03.2022, 21.06.2022, 12.07.2022, 04.08.2022 மற்றும் 25.08.2022 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. இதன்பிறகு 14.09.2022ஆம் தேதியில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் கலந்துகொண்ட ஏலதாரர்கள் எவரும் கேள்வி கேட்கவில்லை.

இதனை தொடர்ந்து மீண்டும் 23.09.2022ஆம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. கீழ்க்கண்ட விபரப்படியான இருவர் மட்டும் ஏலத்தில் கலந்துகொண்டனர்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.ரா.பெரியசாமி | 9,01,000/– |
| 2) | திரு.ஜோ.சிவக்குமார் | 8,98,000/– |

இதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.9,01,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து ஓராயிரம் மட்டும்) திரு.ரா.பெரியசாமி என்பவர் கோரியுள்ளார்.

கடந்த ஆண்டுகளான 2018–2019ஆம் ஆண்டில் ரூ.13,25,000/–க்கும், 2019–2020ஆம் ஆண்டில் ரூ.13,91,000/–க்கும், 2020–2021ஆம் ஆண்டில் ரூ.14,60,813/–க்கும் ஏலம் விடப்பட்டது (2020–2021ஆம் ஆண்டில் கொரோனா நோய் தொற்று ஏற்பட்ட காரணத்தால் இரண்டு மாதங்களுக்கான தொகையினை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.(D)(298)–ன்படி, 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான இரண்டு மாதங்களுக்குரிய தொகை ரூ.2,43,469/– தள்ளுபடி செய்து உத்தரவு வழங்கப்பட்டது).

இதன்படி மூன்றாண்டு சராசரி வருவாய் ரூ.13,92,271/– ஆகும். 2020–2021ஆம் ஆண்டின் உயர்ந்தபட்ச கேட்பு தொகையுடன் 5% கூடுதல் தொகை சேர்த்தால், 2021–2022ஆம் ஆண்டிற்கு ரூ.15,33,854/– ஆகும்.

கொரோனா நோய் தொற்று காரணத்தால் 2021–2022ஆம் ஆண்டிற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி ஏற்கனவே ஒப்பந்தம் பெற்று நடத்திவந்த ஒப்பந்ததாரருக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்து வசூல் செய்யப்பட்டது. ஆனால், ஒப்பந்ததாரரிடம் தொடர்ந்து உரிய கேட்புத் தொகை செலுத்த பலமுறை தெரிவித்தும், தொகை செலுத்தாத காரணத்தால், நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக நகராட்சிக்கு நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு 01.10.2021 முதல் நகராட்சி பணியாளர்களை கொண்டு துறைமூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) | 01.10.2021 முதல் 31.03.2022 வரை ரூ. | 306555/– |
| 2) | 01.04.2022 முதல் 31.08.2022 வரை ரூ. | 295571/– |
| | மொத்தம் ரூ. | 602126/– |

2020–2021ஆம் ஆண்டு கேட்பு தொகையுடன் 5% கூடுதல் செய்து கணக்கிட்டு 2021–2022ஆம் ஆண்டிற்கான தொகை ரூ.15,33,854/– ஆகும்.

2018–2019, 2019–2020, 2020–2021 மூன்றாண்டு சராசரி வருவாய் ரூ.13,92,271/– ஆகும். துறை மூலம் வசூல் (11–மாதங்கள்) ரூ.6,02,126/– ஆகும். துறை மூலம் ஒரு வருடத்திற்கு வசூல் செய்தால் உத்தேச வருவாய் ரூ.6,56,865/– ஆகும்.

மேற்கண்ட விபரப்படியான வித்தியாச தொகையின் அடிப்படையில் துறைமூலம் வசூல் செய்வதை காட்டிலும் ஏலதாரரின் ஏலக்கேள்வி தொகை அதிகமாக உள்ளது.

நகராட்சி பணியாளர்கள் மூலம் வசூல் செய்வதற்கான ஊதியம் 3x501x365 = ரூ.548595/–, ரசீதுகள் அச்சிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.7500/–, ஆக மொத்தம் துறை மூலம் வசூல் செய்தால் உத்தேச செலவினம் ரூ.556095/– ஆகும்.

மேலும், நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், ஊதியம், இதர செலவினங்களையும் கணக்கிட்டால், நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு தொடர்ந்து 14 முறை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும், ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராததாலும், நகராட்சிக்கு எவ்வித செலவுகளின்றி நேரடி வருவாய் கிடைக்கப்பெறும் என்பதை கருதியும், 23.09.2022 ஆண்டு நடைபெற்ற 15வது பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் திரு.ரா.பெரியசாமி என்பவர் கோரிய உயர்ந்தபட்ச கேள்வி தொகை ரூ.9,01,000/–ஐ, ஊர்ஜிதம் செய்வது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– நகராட்சியின் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு, மேற்கண்ட ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொடர்ந்து 14 முறை கோரியும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராத நிலையில், 15வது 23.09.2022ல் நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச கேள்வி தொகை ரூ.9,01,000/–க்கு கோரியுள்ள திரு.ரா.பெரியசாமி என்பவரின் கேள்வித் தொகையை ஏற்று சாலையோர கடைகளில் தினசரி சுங்கம் வசூல் செய்யும் உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1769/2020/அ1)

*******

## குளித்தலை நகராட்சி

### குளித்தலை நகர்மன்றத்தின் 30.09.2022ஆம் தேதிய சாதாரணக் கூட்டத்தின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 62 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 63 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 64 | ஏற்கப்பட்டது. |
| 4 | 4 | 65 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 66 | ஏற்கப்பட்டது. |
| 6 | 6 | 67 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 68 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 69 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 70 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 71 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 72 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 73 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 74 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 75 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 76 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 77 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 78 | அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 18 | 79 | அனுமதிக்கப்பட்டது. |
| 19 | 19 | 80 | பதிவு செய்யப்பட்டது. |
| 20 | 20 | 81 | பதிவு செய்யப்பட்டது. |
| 21 | 21 | 82 | அனுமதிக்கப்பட்டது. |
| 22 | 22 | 83 | அனுமதிக்கப்பட்டது. |
| 23 | 23 | 84 | அனுமதிக்கப்பட்டது. |
| 24 | 24 | 85 | அனுமதிக்கப்பட்டது. |
| 25 | 25 | 86 | அனுமதிக்கப்பட்டது. |
| 26 | 26 | 87 | அனுமதிக்கப்பட்டது. |
| 27 | 27 | 88 | அனுமதிக்கப்பட்டது. |
| 28 | 28 | 89 | அனுமதிக்கப்பட்டது. |
| 29 | 29 | 90 | அனுமதிக்கப்பட்டது. |
| 30 | 30 | 91 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 31 | 31 | 92 | அனுமதிக்கப்பட்டது. |
| 32 | 32 | 93 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.